*PCAS International Journal for Multidisciplinary Research (PCAS IJMR)*
ISSN (Online): 3108-2807 Volume 3, Special Issue 1, Jan-Mar 2026

# திருக்குறளில் நிலையாமை

(முனைவர் ந. அறிவரசன், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாட்ரிஷியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அடையாறு, சென்னை-600 020)

உலகின் பொதுமறையான வான்புகழ் வள்ளுவம் ஒப்பற்ற ஒரு வாழ்வியல் நூலாகும். இந்நூல் மனிதன் மனிதாக வாழவும், மாமனிதனாக உயரவும், தெய்வமாக விளங்கவும் வழிகாட்டுகிறது. வாழ்வாங்கு வாழ திருவள்ளுவர் உணர்த்திய கருத்துகள் பற்பல. அவற்றுள் நிலையாமையும் ஒன்றாகும். இவற்றை வள்ளுவர் எங்ஙனம் விளக்கியுள்ளார் என ஆராய்வது நோக்கமாகிறது.

## நிலையாமை: விளக்கம்

உலகில் எது நிலையானது, எது நிலையற்றது என்றுணர்வது மெய்யுணர்தலாகும். இம்மெய்யுணர்வை கைகொண்ட பல்வேறு தமிழறிஞர்கள் நிலையாமைக் குறித்து பின்வருமாறு வரையறுக்கின்றனர். பரிமேலழகர், ‘நிலையாமையாவது தோற்றமுடையனயாவும் நிலையுதல் இலவாம் தன்மை’ என்கிறார். மணக்குடவர், ‘நிலையாமையாவது, மயக்கத்தினால் தான் என்று நினைத்திருக்கின்ற யாக்கையும், தனது என்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலையில்லாமையைக் கூறல்’ என்கிறார். பரிதியார், ‘நிலையாமையாவது செல்வம், யாக்கை, இளமை இவை நிலையல்ல என்றவாறு’ என்கிறார். கவிராஜபண்டிதர், ‘உலகில் தோன்றிய பொருள்கள் யாவும் நிலையின்றியுள்ள நிலைமை’ என்கிறார். தேவநேயப் பாவாணர், ‘நிலவுலகத்தில் தோன்றும் அறுவகை உயிர்களும், பிறிதோர் உயிரால் கொல்லப்படாவிடத்தும், எப்பருவத்தும், பிணியாலும், பிணியில்லாது வாழ்நாள் நீடினும் தத்தம் இனத்திற்குரிய காலவெல்லையில் மூப்பாலும், ஒருவகையானும் தடுக்கப்பெறாது தம் உடம்பினின்று நீங்கி நிலையில்லாமல் போதல்’ என்கிறார். இந்நிலையாமை நொடிப்பொழுதில் ஆயிரக்கணக்கான மறவர் போர்க்களத்தில் கொலையுண்பதால் விளங்கித் தோன்றுவதாலும், கொல்லாமையில்லாவிடத்தும்; தப்பாது நிகழும் என்பதை உணர்த்தற்கும் கொல்லாமையின் பின்வைக்கப்பட்டது.

## நிலையாமையை உணர்த்தும் அடிப்படைக் காரணம்

செல்வம், இளமை, யாக்கை என்பன நிலையில்லாதவை என்பது உணர்ந்து உடலில் உயிர் இருக்கும்போதே நல்லன செய்து வாழ வேண்டும். அல்லன ஒழித்து மனம் திருந்த வேண்டும். உலகோர் மீது கொண்ட அன்பினால் திருவள்ளுவர் நிலையாமையின் உண்மையை உணர்ந்து, தெளிந்து, உய்தி பெறவே இதனை உணர்த்தினார். எனவே, தொடர்ந்து வரும் பிறவியைத் தடுக்க, பற்றுக்களைத் துறந்து எங்குமுள்ள, என்றுமுள்ள இறைவனை எல்லோரும் அடைய வேண்டும் என்பதை வலியுறுத்தவே நிலையாமை உண்மையை உணர்த்தியுள்ளார்.

## தொல்காப்பியத்தில் நிலையாமை

நிலையாமையைத் தொல்காப்பியர் காஞ்சித் திணையில் குறிப்பிட்டுள்ளார். 'வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றும் குறிப்பினது காஞ்சியாயிற்று' என்று நச்சினார்க்கினியர் விளக்கமளித்துள்ளார். பரிமேலழகர் 'புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாம் பற்றினை அவன்றது நிலையாமை நோக்கிவிடுதல்' என்கிறார். 'பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே' **(பொருள், 78)** என்றும்,

மாந்தரும் கூற்றம் சாற்றிய பெருமையும்
கழிந்தோத் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும் ............
பல்ர்செலச் செல்லா காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறை இரண்டு உடைத்தே (பொருள், புறம், **79)**

என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளார். "பிறவாமையாகிய ஞானம் திருவடி பிடித்து வரவேண்டும். வித்திலிருந்து அன்று. அதனால்தான் வாழையடி வாழை என்றார்கள். இந்நிலை கைவரப் பெற்று உணர்ந்து தெளிந்தவரே நிலையாமைக்கு நிலையாமை செய்தவர். இவர் தம் பெருவாழ்வே நிலையாமையின் நிலையாமைக்குச் சான்று" **(திருக்குறளில் சித்தர் நெறி, ப.180) என்றார் அரங்க.** இராமலிங்கம்.

புல்லிறிவாண்மையின் விளக்கம்

உண்மையறிவை அறிவுடைமை அதிகாரத்திலும், காரறிவை (இருளறிவு) கள்ளாமை அதிகாரத்திலும், புல்லறிவை நிலையாமை அதிகாரத்திலும் விளக்கியுள்ளார்.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை (குறள், **331)**

நிலையில்லாத பொருட்களை நிலையுடையன என்று கருதும் அற்ப அறிவானது மிகவும் இழிந்த கடைப்பட்டதாகும். கற்றோர் மனிதர், கல்லாதவர் விலங்கு. இதனால் அறிவு பெற்ற மனிதன் பிற உயிர்களைவிட மேம்பட்டவன் என்பது விளங்கும். நல்லது கெட்டது, நிலையானது, நிலையற்றது என்று மெய்ப்பொருள் காண்பதுதான் அறிவுடைமை. நாளும் சாகின்றவரைப் பார்க்கிறோம். நாளும் ஒவ்வொருவற்கும் இளமை கழிந்து முதுமை வருகிறது. ஏழையாய் இருப்போர் செல்வராகவும், செல்வர் ஏழையாவதையும் உலகில் கண்டு வருகிறோம். எனவே, உலகில் நிலையில்லாதவற்றை நிலையென்று கருதி வாழ்வது புல்லறிவாகும். உயிர்களுள் கடையானது ஓரறிவாகிய தாவரங்கள். அத்தாவரங்களுள் புல் மிகவும் அற்பமானது. எனவேதான், புல்லறிவு என்றார். ஆகவே, காரறிவென்னும் மடமையிலும்; புல்லறிவு கடைப்பட்டது. புல்லறிவு கடை என்பதால், நிலையில்லாதவற்றை உணர்ந்து தெளிவது தலையறிவாகும் என்பது குறிப்பு.

"தோற்றம் உடையனவற்றைக் கேடில் என்று கருதும் புல்லறிவால் அவற்றின் மேல் பற்றுச் செய்தல் பிறவித் துன்பத்திற்கு ஏதுவாகலின், அது வீடெய்துவார்க்கு இழுக்கென்பது இதனால் கூறப்பட்டது" என்று புல்லறிவின் இழிநிலையை பரிமேலழகர் விளக்கினார். புல்லறிவாளர்

பெரும்பாலும் பற்றுக் கொள்வது சிற்றின்பத்துக்குக் காரணமான பொருளின் மீதும், அதனை அனுபவிக்கும் உடம்பின் மீதும் என்பதை உணரலாம். எவற்றைப் புல்லறிவாளர் நிலையானவை எனக் கருதுகின்றனர் என்பதை அடுத்து வரும் பாடல்களில் உணர வைத்துள்ளார். **332-333** ஆகிய குறட்பாக்கள் வாயிலாகச் செல்வ நிலையாமையும், **334-335** ஆகிய குறட்பாக்கள் வாயிலாக இளமை நிலையாமையையும், **336-340** ஆகிய குறட்பாக்கள் வாயிலாக யாக்கை நிலையாமையையும், **337** ஆவது குறள் வாயிலாக வாழும் வகையறியா உலகியல் மக்கள் இயல்பையும், நிலையாமையை உணர்ந்து செய்யத்தக்கன எவையென்பதை **333, 335** ஆகிய குறட்பாக்கள் வாயிலாகவும் உணர்த்தியுள்ளார்.

ஒப்புநோக்கி உணரத்தக்கன

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென்று உணர்வீர்காள்
எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காண ஒண்ணாதே (திருமந்திரம், **2)**

என்ற திருமூலரின் கருத்தை இங்கு சுட்டத்தக்கது**.** நில்லாதவற்றின் நிலைகளை உணர்ந்தவர் தானமும் தவமும் செய்து உயர்கின்றனர். உணராத புல்லறிவாளர் பிறவித் துயரால் அல்லல்படுகின்றனர். எது நித்தியம், எது அநித்தியம் என்றுணர்வதை வடநூலார் விவேகம் என்பர். இதனைக் கைவல்லியத்தில், நித்திய அநித்தியங்கள் நிண்ணியம் தெரிவிவேகம் என்று கூறப்பட்டுள்ளது. எது உலகில் நிலைபெற்றுள்ளது என்பதற்குச் சூளாமணி, 'நிலையாமை சால நிலைபெற்ற தன்றே' என்று கூறியுள்ளது. தேடிய செல்வம், சிறந்திடும் கல்வி, நாடிய வீரம், நலம் திகழ் குணம், கூடிய சுற்றம் இவற்றுடன் கொண்டாடும் அனைத்தும் மாயும் நீடிய ஞாலம் எல்லாம் நிலையாமை மயமே அன்றே' என்ற குறுஞ்திரட்டுப்பாடல் குறிப்பிடுகிறது**.**

செல்வத்தின் இயல்பு

உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொர் இயல்புண்டு. பள்ளத்தை நோக்கிப் பாய்வது நீரின் இயல்பு. மேல் நோக்கி எரிவது தீயின் இயல்பு. ஓரிடத்தில் நில்லாது அலைவது காற்றின் இயல்பு. செல்வம் ஒரே இடத்தில், ஒருவரிடத்தில் எப்போதும் நிலையாகத் தங்கியிருக்காது என்பதே அதன் இயல்பாகும். பிறரிடம் செல்வோம், செல்வோம் எனச் செல்வதால் செல்வம் எனப்பட்டது. செல்வத்தின் இயல்பைத் திருவள்ளுவர் உவமை வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்**.**

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந்தற்று (குறள், **382)**

ஒருவனுக்குப் பெருஞ்செல்வம் வந்து சேர்வது நாடக அரங்கிற்குக் காண்போர் கூட்டம் வந்து கூடுவது போன்றது. அச்செல்வம் அவனைவிட்டு நீங்குவது நாடகம் முடிந்தவுடன் மக்கள் கூட்டம் கலைந்து செல்வது போன்றதாகும். அதாவது பல்வேறு இடங்களிலிருந்து பல்வேறு

மக்கள் ஒருவராக, இருவராக பல நேரங்களில் வந்து ஒரே வழியில் நாடக அரங்கில் செல்வர். அதைப் போலச் செல்வம் பல காலங்களில், பல வழிகளில் ஒருவனிடம் வந்தடையும். நாடகம் முடிந்ததும் ஒரே நேரத்தில் கூட்டம் முழுவதும் பல வழிகளில் வெளியேறுவர். அதைப்போலச் செல்வமும் ஒரே நேரத்தில் ஒருவனை விட்டுப் போய்விடும். பலகாலும் வருந்தி முயன்று சேர்த்த செல்வம் ஒரே நொடியில் போனாலும் போகும். மக்கள் கூடும் இடம் சந்தை, கடைத்தெரு, பேருந்து நிறுத்தம் என இடங்கள் பலவுண்டு. வள்ளுவர் கூத்தாட்டு அவையை உவமையாகக் கூறியதேன்? செல்வம் சேர்ந்தபோது இன்பமும், கெட்டுப் போகும்போது துன்பமும் உண்டாகும். எதைப்போல எனில் நாடகம் கண்டு களித்தல் போலும், நாடகம் முடிந்ததும் களைப்பாய், சோர்வாய் செல்லுதல் போல என உணர்த்தவேயாகும். பெருஞ்செல்வம் போக்கும் என்ற எச்சவும்மை பெருஞ்செல்வத்தின் வருகையை உணர்த்திற்று. கொஞ்சம் கொஞ்சமாகத் திரண்டு வருதல், ஒரே நேரத்தில் புரண்டு போதல் என்னும் நாடக மக்கள் காட்சிகள் இரண்டையும் ஒப்புமை காட்டிய நுட்பம் உணரத்தக்கது. மேலும், நடிப்போரும் நாடகம் முடிந்தவுடன் ஒப்பனையைக் கலைத்துவிடுவர். எனவே, நடிகர்கள் போட்ட வேடம் கலைவது போலச் செல்வம் உடனே கழியும். ஒப்பனைக்கு அதிக நேரமாகும். அதைப்போலச் செல்வமும் நல்வினையால் சேரப் பல நாளாகும். இங்ஙனம் செல்வ நிலையாமையை நாடகக் காட்சி உணர வைக்கிறது. இவ்வுலக வாழ்க்கைக்கு மிகவும் தேவையானச் செல்வச் சிறப்பினைப் பொருள் செயல்வகை அதிகாரத்திலும் பயனின்றிப்போகும் செல்வத்தினை நன்றியில் செல்வ அதிகாரத்திலும், செல்வ நிலையில்லா இயல்பை நிலையாமை அதிகாரத்திலும் உணர்த்தியுள்ளார்.

முல்லை முகை சொரிந்தால் போன்றினிய பாலடிசில் சில மகளிர் ஏந்த
நல்ல கருணையால் நாள் வாயும் பொற்கலத்து நயந்துண் டார்கள்
அல்லல் அடைய அடகிடுமின் ஓட்டகத்து என்று அயில்வார்க் கண்டும்
செல்வம் நமரங்காள் நினையன்மின் செய்தவமே நினைமின் கண்டீர்
(சீவசிந்தாமணி)

என்று திருத்தக்கதேவரும் வள்ளுவர் வாய்மொழியை வழிமொழிந்துள்ளார். மேலும், செல்வம் நீங்கும் இயல்புகளை நீதிநூல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

சுழல்கக டக்கால் போலும் தோன்றியே அழியின் போலும்
ஆழல்மன வேசை போலும் அருநிதி மேவி நீங்கும்
பழமைபோல் அதனை நம்பிப் பழியுறச் செருக்கல் மேக
நிழலினை நம்பிக் கைக்கொள் நெடுங்குடை நீத்தல் ஒப்பே

மேலும், 'அற்கா இயல்பிற்று செல்வம்' **(**குறள்,**333)** என்று நேரடியாகத் தெளிவாகச் செல்வத்தின் இயல்பை உணர்த்தியுள்ளார். மேலும், செல்வம் நீர்மேல் கோலம்போல அழியும் என்பதை 'நிறை செல்வம் நீரில் சுருட்டு நெடுந்திரைகள்' என்கிறது நீதிநெறி விளக்கம். இதனால் செல்வம் கடலலைகள் போல வந்து போகும் என்பதை உணரமுடிகிறது.

இளமை நிலையாமை

இளமைப் பருவம் நீரில் தோன்றும் குமிழ் போன்றது. முதுமை அடைவதை எவராலும் தடுக்க இயலாது. நாளானது, நமது இளமையை அறுக்கும் வாளாகும். நாளாக நாளாக நமது இளமை மாறி முதுமை வந்துவிடுகிறது. எனவே, நாள் என்பது முதுமையை உண்டாக்கும் வாள் என உணரவேண்டும். இதனை

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின் (குறள், 334)

என்னும் குறளில் உணர்த்தியுள்ளார். இ∴து உயிரீரும் என்றமையால் இளமை நிலையாமை கூறிற்று என்றார் மணக்குடவர். அந்நாள் ஒருவனை ஈர்கின்மையை உணர்வார் அரியராகலின் 'உணர்வாப் பெறின்' என்பதில் வள்ளுவர் உணர்த்தினார். ஈர்தல்-அறுத்தல். ஈர்வாள் மரத்தை அறுப்பதுபோல நாள் ஒருவனின் வாழ்நாள் ஆயுளை அறுக்கிறது என்பதால் நாட்களால் இளமை கழிந்துபோகிறது. இளமை நில்லாதது ஆகிறது. நாலடியாரும்,

தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்து நும் நாள் உண்ணும்

என்று அறிவுறுத்தியுள்ளது. நாளின் கழிவு இளமையின் அழிவு என்று உணர வேண்டினார்.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் (குறள், 335) என்ற குறள் தொடர் இளமையின் அழிவையும், அதன் நிலையாமையையும் உணர்த்துகிறது. இளமை கழியும்போது முதுமை வருகிறது. அப்போது கண்ணொளி மங்கும், காது கேட்பாது, நாக்கு உள்ளழுக்கும், சரியாகப் பேச்சு வராது, மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கும். விக்கல் உண்டாகும். உடல் தள்ளாடும். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? இளமை அழிவைத் தானே! நாலடியாரும் 'மூப்புமேல் வாராமுன் அறவினையை ஊக்கி முயல்க' (பா.326) என்கிறது. எனவே, மூப்பு வருமுன் என்றால் என்ன பொருள்? இளமை கழிகிறது என்பதுதானே, 'மேல்நோக்கி வருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்தலேயன்றிச் சொல்லலும் ஆகாமையானும் வாராமுன் என்றும், அதுதான் இன்ன பொழுது வரும் என்பது இன்மையின் மேற்சென்று என்றும் கூறினார்' என்று பரிமேழகர் நுட்பமாக விளக்கியுள்ளார். இதனால் இளமையும் நிலையில்லலாதது என்ற உண்மையை உணரலாம்.

யாக்கை நிலையாமை

குடம்பை தனித்தொழிய புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு (குறள், 330)

கூட்டைவிட்டுப் பறவை பறந்துபோவது போல, உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பாகும். 337 ஆவது பாடலில் ஒருபொழுது என்று காலத்தைக் கூறியுள்ளார். அதனால் இப்பாடலில் உயிர் எப்போதும் போகும் எனக் கூறமுடியாது. எந்தக் கணமும் போகலாம் என உணர வைத்தார். இதனால்

யாக்கையின் நிலையாமை உணர்த்தப்பட்டது. 'நட்பு என்றது ஈண்டு குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாகிய உடம்பும் தம்முள் மாறாகலின் வினை வயத்தால் கூடியதல்லது நட்பில் என்பது அறிக' என்று பரிமேழகர் விளக்கியுள்ளார்.

இறப்பு கண்மூடி உறங்குவது போன்றது. பிறப்பு கண் திறந்து விழிப்பது போன்றது. இவற்றை,

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (குறள், **339)**

என்பதில் உணர்த்தினார். சுடுகாடு, இடுகாடு என்பவற்றுடன் தொடர்புடையதால் சாக்காடு என்றார்.

சாக்காடு என்பது அருவுருவத் தன்மை
யாக்கை வீழ்கதிர் எனமறைந்திடுதல்

என்ற மணிமேகலை வரிகள் இங்கு எண்ணத்தக்கன. இப்பாடலில் யாக்கை நிலையாமையை உணர்த்த நினைத்ததால் முதலில் யாக்கை நிலையாமை குறிக்கும் சாக்காட்டை முன்வைத்தார்.

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது (மணிமேகலை, **16:86)**

உறங்கல், விழித்தல் என்பன உயிரின் இயல்பு. அதுபோல இறப்பும் பிறப்பும் மாறிமாறிவரும் என்பது கருத்து. 'நிலையாமையை நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது' என்ற பரிமேலழகர் விளக்கம் ஏற்கத்தக்கது.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (குறள், **340)**

உடம்பினுள் ஒரு பகுதியில் மறைந்திருந்த உயிர்க்கு நிலையாகப் புகுந்திருப்பதற்கு ஒரு வீடும் அமையவில்லையோ**?** துச்சில் = துச்சு + இல். சொந்தமில்லாத. அதாவது, வாடகை வீடு. ஒவ்வொரு பிறவியிலும் உயிரானது வெவ்வேறு உடல்களில் புகுவதால் துச்சில் என்றார். புக்கில் = புக்கு + இல். அதாவது சொந்தமாகக் கட்டிப் புகுந்த வீடு. உயிர் உடலில் இருப்பது வாடகை வீட்டில் இருப்பது போலாகும். உயிர்க்குச் சொந்த வீடு இறைவனை அடைவதாகும் என்பது குறிப்பு. 'புக்கில் என்பது முத்தி ஸ்தானம்' என்றார் மணக்குடவர்.

நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு (குறள், **336)**

என்பதில் யாக்கை நிலையாமையைத் திட்டவட்டமாக உணர்த்தியுள்ளார்.

வீற்றிருந்தான் தன்னை வீதிதனில் இருந்தான்
நேற்றிருந்தான் இன்று வெந்து நீறானான்

என்றார் பட்டினத்தார். ‘உளன் என்பது இருந்ததையும், இன்மை இறத்தலையும் உணர்த்தின. இது யாக்கை நிலையாமை கூறிற்று’ என்று மணக்குடவர் கூறியுள்ளார்.

நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேளலறச்
சென்றான் எனப்படுதலால் (நாலடி., **29)**

என்பதால் யாக்கை நிலையாமை உணர்த்தப்பட்டது. ‘மின்னின் நிலையில் மன்னுயிர் ஆக்கைகள்’ என்றார் நம்மாழ்வார். திருக்குறள் 338-340 ஆகிய குறட்பாக்கள் யாக்கை நிலையாமையை உணர்த்தின.

உலக மக்களின் எண்ண இயல்பு

ஒரு கணம் அளவும் உயிர் வாழ்ந்திருப்பதை அறியாத மக்கள் பல கோடி எண்ணங்களை எண்ணி எண்ணி மயங்கித் துன்புறுகின்றனர். இதனை,

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதும்
கோடியும் அல்ல பிற (குறள், **337)**

என்பதில் தெளிவாய் உணர்த்தினார். மக்கள் வாழ்வானது மின்னல்போல் தோன்றி மிக விரைவில் அழிவது. இவ்வுண்மையை ஒரு பொழுதும் என்பதில் உணர்த்தினார்.

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன – கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான் (நல்வழி, **28)**

என்று ஔவைப்பாட்டி வள்ளுவரை வழிமொழிந்தார். நிலையில்லாத வாழ்க்கையை உணராமல், ஒரு கணமும் நிம்மதிய வாழாமல், வருங்கால வாழ்வை நினைத்து எண்ணும் எண்ணங்கள் பலகோடி. இத்தகைய மாந்தர் முகத்தில் கண் இருந்தும் கண்ணில்லா மாந்தர் என்பதைக் கண்புதைந்த மாந்தர் என எள்ளி நகையாடினார். உண்மை உணராதோர் கண்ணற்றவர் என்பது கருத்து.

சிலந்தியானது, தன் வாய் நூலால் தன்னைச் சுற்றிக் கூடுகட்டி மாய்கிறது. அதைப்போல் உலக மக்கள் கோடிக்கணக்கான எண்ணங்களால் கோட்டைக்கட்டி, மயக்கத்தால் வாழும் வாழ்க்கையை இழந்துவிடுகின்றனர். வாழும் வகையறியாமல் வருங்கால் எண்ண அவாவில் இருக்கும் வாழ்வை இழப்பது மாந்தரின் இயல்பாகும்.

எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம்
புண்ணாகச் செய்ததெல்லாம் போதும் பராபரமே

என்று தாயுமானவர் பாடியுள்ளார்**.**

நிலையாமையால் உணர்த்துவது எது?

‘அற்கா இயல்பிற்றுச் செல்வம்’ என்பதில் செல்வ நிலையாமையும், நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் என்பதில் இளமை நிலையாமையும், குடம்பை தனித்தொழிய புள் பறந்தற்றே என்பதில் யாக்கை

நிலையாமையும் வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவற்றிலிருந்து அவர் உணர்ந்த விரும்பியது யாது!

நிலையில்லாத செல்வத்தைப் பெற்றால் நிலையான அறங்களைச் செய்ய வேண்டுமென்பதை 'அதுபெற்றால் அற்குப ஆங்கே செயல்' **(**குறள், **333)** என உணர்த்தினார். செல்வம் பெறுவது, ஈட்டுவது அரிது. இதனைப் பெற்றால் என்ற சொல் உணர்த்தும். ஆங்கே என்றது அந்த இடத்தில், அப்பொழுதே நல்லது செய்ய வேண்டும் என்ற விரைவைக் குறித்தார். 'நம்பன்மின் செல்வம் நமரங்காள்! நல்லறமே நினைமின் கண்டீர்' என்று திருத்தக்க தேவரும் வள்ளுவர் கருத்தினை வழிமொழிந்துள்ளார்.

பேசமுடியாமல், நாவானது ஒடுங்கி விக்கல் வருமுன் 'நல்வினை மேற்சென்று செய்யப்படும் (குறள், **335)** என்பதில் வற்புறுத்தினார். எனவே, முதுமை வருமுன்னரே இளமையிலேயே, வாழும் காலத்திலேயே நல்வினைகளை விரைந்து செய்ய வேண்டும் என்கிறார்.

முடிவுரை

நிலையில்லாதவற்றை, நிலையானவை என எண்ணுவது புல்லறிவு. இதனை,

பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே

என்று தொல்காப்பியம் உலக நிலையாமையை உணர்த்தியுள்ளது.

இளமையும் நிலையாவால் இன்பமும் நின்ற அல்ல
வளமையும் அஃதேயால் வைகலும் துன்பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக்கு என்றும் என்றும்
விளைநிலம் உழுவார்போல் வித்துநீர் செய்து கொண்மின்

என்று வளையாபதியும், உயிர்நிலைத்தபோதே நல்லறம் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளது.

நீரில் குமிழி இளமை, நிறைசெல்வம்
நீரில் சுருட்டு நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாது எம்பிரான் மன்று

என்று நீதிநெறி விளக்கம் வாழும்போது என்ன செய்ய வேண்டுமெனக் கூறியுள்ளது.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே (புறம், **165)**

என்பது எண்ணத்தக்கது. எனவே செல்வம், இளமை, யாக்கை இவற்றின் நிலையில்லாமையை உணரவேண்டும். அவ்வாறு உணர்வது மெய்யறிவு. உணர்ந்து செல்வம் உள்ளபோது, உயிர் உடலில் உள்ளபோதே நல்லறங்களைக் காலம் நீட்டிக்காமல், உடனடியாகச் செய்ய வேண்டும். இங்ஙனம் செய்தால் பிறவிப் பிணி நீங்கி வீடு பெறலாம் என்ற குறிப்பை உணர்த்தியுள்ளார்.